IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 111/2014**

Deposition witness for Plaintiffs/Defendant/Respondent

Solemnly affirmed and sworn by Thiru.S.Chandru Grade III Bench Clerk on 01.07.2022 accordance with the provisions with the Act of 1873.

| | |
|---|---|
| Name : Ramachandiran | Father's Name : Kullappa |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 69 |

வா.சா. 1

## 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :

நான் தற்போது நாகண்டப்பள்ளியில் கட்டியுள்ள வீட்டில் நாகராஜ் என்ற நபர் குடியுள்ளார். மாத வாடகையாக ரூ.500/- செலுத்தி வருகிறார். அரசாங்கத்தால் எனக்கு வழங்கியுள்ள வீட்டை வாடகைக்கு கொடுக்கக்கூடாது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி நிலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதை காண்பிக்கும் ஆணை என்னிடம் உள்ளது, அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். நாகண்டப்பள்ளியில் உள்ள நிலமானது என்னுடைய தகப்பனாருக்குதான் வழங்கப்பட்டது என்றாலும் என்னுடைய பெயருக்கு வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்குரிய பட்டா, 1 ம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது என்ற விவரம் எனக்கு கடந்த 30 வருடமாக தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு கடந்த 8 1/2 வருடங்களாகதான் தெரியும். வழக்கு பட்டிகை சொத்து குறித்து பிரதிவாதியின் பெயரில் தவறுதலாக பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று நான் வருவாய் துறையில் எந்த மனுவும் தாக்கல்

செய்யவில்லை, இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக பட்டா பெயர் மாற்றத்தில் எழும் பிரச்சனை குறித்து வருவாய் துறையில்தான் மனு தாக்கல் செய்து நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்றாலும் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வருவாய் துறையில் நான் எந்த மனுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் வட்டாட்சியரை இவ்வழக்கில் தவறுதலாக கட்சி சேர்த்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 3 – வா.சா.ஆ.5 ஆவணங்கள் நாகண்டப்பள்ளியில் உள்ள எனக்கு உரிமைப்பட்ட வீட்டிற்குரிய ஆவணங்கள் என்றாலும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் 101 என்று எழுதப்பட்டிருந்த இடத்தில் 102 எழுதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை 1ம் பட்டியல் சொத்திற்கு கிழக்கு - மாரப்பா வீடு, மேற்கு - எல்லப்பா வீடு, வடக்கு - ரோடு மற்றும் தெற்கு - ஹரிஜன் காலனி உள்ளது. வழக்கு பட்டிகை 2ம் பட்டிகை சொத்தில் கிழமேல் 40 அடி நீளமும் தென்வடல் 20 அடி நீளமும் உள்ளது. வழக்கு பட்டிகை 2ம் பட்டியல் சொத்திற்கும் 1ம் பட்டியல் சொத்திற்கும் 4 பக்க எல்கைகள் ஒன்றுதான். வழக்கு பட்டியல் சொத்துகளுக்கு சுற்றியுள்ள நிலங்களின் உரிமையாளர்களுக்கும் எனக்கும் எந்த தகராறும் இல்லை. என்னுடைய தந்தைக்கு வழக்கு பட்டிகை சொத்துகள் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதற்குரிய 4 பக்க எல்கைகள் என்னவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்துகளுக்குரிய அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது குறித்து தற்போது எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எல்கைகளை தான் என்னுடைய வாதுரையிலும் 4 பக்க எல்கைகளாக குறிப்பிட்டுள்ளேன். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் எதிருரையில் அவர் தற்போது உள்ள

நிலத்தின் 4 பக்க எல்கைகளும் வழக்கு பட்டிகை சொத்தில் குறிப்பிட்டுள்ள 4 பக்க எல்கைகளும் வேறுபட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் நான் குறிப்பிட்டுள்ள 4 பக்க எல்கைகள்தான் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு வழக்கு பட்டிகை சொத்து தவிற முருகன் கோவில், தின்னூர் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை என் பெயரில் நான் குறிப்பிட்டுள்ளது போல் உயில் ஆவணம் எழுதியிருந்தால் ஒசூரில் உள்ள வீடு குறித்தும் உயில் ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கமாட்டார், அவ்வாறு குறிப்பிட்டிருக்கும் காரணத்தினால் மேற்படி வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தினை நான்தான் போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தைக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரத்தினை போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் என்னுடைய தந்தையோ நானே எந்த காலத்திலும் கைவசம் வைத்து அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல, என்னுடைய தந்தை சுமார் 40 ஆண்டுகாலமாக வழக்கு பட்டிகை சொத்தின் சுவாதீனத்தில் இருந்தார், அவர் காலத்திற்கு பின்பு நான் சுவாதீனத்தில் உள்ளேன். கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு வழக்கு பட்டிகை சொத்தை சென்று பார்வையிட்டு வந்தேன். வழக்கு பட்டிகை சொத்து உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு என்னுடைய தந்தை குள்ளப்பா பெயரில் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிற்கான மின் கட்டணத்தை நான் கட்டியதில்லை. தற்பொழுது வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிற்கான மின் இணைப்பு 1ம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது என்றாலும் அவர்தான் மின்கட்டணம் செலுத்தி வருகிறார் என்றாலும் சரியல்ல, அதைப்பற்றி எனக்கு தெரியாது. கடந்த 8 வருடங்களாக 1ம் பிரதிவாதி என்னுடைய அனுமதியுடன் வழக்கு பட்டிகை சொத்துள்ள வீட்டில் உள்ளார். 1ம் பிரதிவாதியிடம் மாத வாடகை எதுவும் வாங்கவில்லை, என்னுடைய உறவினர் என்ற காரணத்திற்காக வழக்கு

பட்டிகை வீட்டில் குடியிருக்க அனுமதித்தேன். மேற்படி விவரம் ஊர்காரர்கள் அனைவருக்கும் தெரியும். வழக்கு பட்டிகை சொத்து 1ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றாலும் ஆகவே அதில் வசிப்பதற்கு என்னிடம் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. வருவாய் ஆவணங்களும் மின் கட்டண ரசீதுகளும் வழக்கு பட்டிகை சொத்து குறித்து 1ம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான், கடந்த 8 வருடமாக அவர் பெயரில் உள்ளது, அதற்கு முன்பிருந்த ஆவணங்கள் என்னுடைய பெயரில் இருந்தது. வழக்கு பட்டிகை சொத்து குறித்த வரி ரசீதுகளை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அவை என்னுடைய தந்தையின் பெயரில் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்திற்குரிய பட்டா என்னுடைய தந்தையின் பெயரில் உள்ளது. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் வழக்கு பட்டிகை சொத்திற்குரியது கிடையாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் இவ்வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் அதன் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. நீதியின் நலன் கருதி 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR